வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

 மூ.மு .எண்.4783 /அ2/2023 நாள்.23.11.2023

பொருள் பள்ளிக்கல்வி – தேசிய ஆசிரியர் நல நிதி – தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கல்விச் செலவு 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டு முதல் ரூ.50,000/- மற்றும் பட்டயப் படிப்பிற்கு ரூ.15,000/- வரை கல்வி கட்டணத் தொகை ( Tutuiln fees) உயர்த்தி வழங்க அரசாணை பெறப்பட்டது – தொடர்பாக

பார்வை

1. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 110 விதிகயின் கீழ் செய்தி வெளியீடு எண்.408 நாள்.01.03.2023.
2. அரசுக் கடித எண்.3795 / வ.செ – 2023 -1 நாள்.27.03.2023.
3. அரசாணை (நிலை)எண்.169 பள்ளிக் கல்வி (பக5(2)த்துறை நாள்.03.10.2023.
4. சென்னை.6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக் கல்வி) அவர்களின் கடித ந.க.எண்.064404/ஐ/இ1/2023 நாள்.17.11.2023.

பார்வை 3 மற்றும் 4 இல் கண்ட அரசாணையில் தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து ஏற்கனவே 2022 – 2023 ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்பட்டு வந்த தொழிற்கல்வி பயில, கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் உயர் கல்வி கட்டணத் தொகை (Tution Fees) தொழிற்கல்வி பட்டப்படிப்பு ரூ.10,000/-ம் மற்றும் பட்டயப் படிப்பிற்கு ரூ.5,000/- நிதியுதவியை உயர்த்தி கீழ்கண்டவாறு ஆணை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் உயர் கல்வி கட்டணத் தொகை (Tution Fees) அல்லது ரூ.50,000/-இதில் எது குறைவோ, அத்தொகை மற்றும் தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் கல்வி கட்டணத் தொகை (Tution Fees) அல்லது ரூ.15,000/- இதில் எது குறைவோ அத்தொகை தேசிய ஆசிரியர் நல நிதியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து மட்டுமே உயர்கல்விக் கட்டணத் தொகையை வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3 .பார்வை 3ல் கண்ட அரசாணையில், இணைப்பு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில், மாநில தேர்வுக்குழு தெரிவு செய்யும் தகுதியுள்ள ஆசிரியர்களின் உயர் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்வி கட்டணத் தொகை (Tution Fees) வழங்க அனுமதி அளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இணைப்பு – (1)

நிபந்தனைகள்

1. விண்ணப்பங்கள் வாயிலாக அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஓய்வு பெற்ற மற்றும் பணியிலிருந்து இறந்தஆசிரியரின் ஒரு குழந்தைக்கு தொழிற்கல்வி பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும்.

2. ஒவ்வொரு கல்வியாண்டும் தேசிய ஆசிரிய நல நிதி திட்டத்தின் கீழ் ஆசிரியர் தின கொடி விற்பனை மூலம் பெறப்படும் நிதியின் மூலம் ஆசிரியர்களின் குழந்தைகள் பயன் பெறுவர்.

3. அரசாணை (நிலை)எண்.161 பள்ளிக் கல்வித்துறை நாள்.20.05.1998 இல் தெரிவிக்கப்பட்டுள்ள தொழிற்கல்வி, பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பயிலவிருக்கும் மாணவர்களை தெரிவு செய்யப்படுவர்.

4. பெற்றோர் ஆண்டு மொத்தவருமானம் ரூ.7,20,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

5. ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் அதிகப்படியாக பிள்ளைகள் பயன்பெறும் வகையில் உயர் கல்வி பயிலும் மாணவருக்கு ஒரு ஆண்டு மட்டும் இந்த மாணவன் முதலாம் ஆண்டு தேர்ச்சி பெற்றவுடன் கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும்.

6. மாணவர்களை தெரிவு செய்யும்போது தாய் / தந்தையை இழந்தை மாணவர்களுக்கு 20% விகித்த்திலும், மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு 10% விகிதத்திலும் மற்றும் SC/ST வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 20% விகிதத்திலும் மற்றும் மாணவிகளுக்கு 30% விகிதத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

7. ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் நல நிதியில் இருப்பில் உள்ள தொகையின் அடிப்படையில் மட்டும், மாநில தேர்வுக் குழுவினால் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை ஒதுக்கீடு செய்து வழங்கப்படும்.

8. மாநில தேர்வக்குழுவின் முடிவுகளே இறுதியானதாகும்.

9. ஒவ்வொரு கல்வி ஆண்டிலும், ஜுன் முதல் வாரத்தில் விண்ணப்பங்கள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வழியாகவோ அல்லது சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மூலமாகவோ நேரடியாக பள்ளிக் கல்வி இயக்கத்திற்கு தபால் வழியாக பெறப்பட்டு தகுதி வாய்ந்த குழந்தைகளுக்கு கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும்.

எனவே மேற்கண்ட அரசாணை நகலினை உரிய தொடர் நடவடிக்கையின் பொருட்டு இத்துடன் இணைத்து அனைத்து அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்கண்ட அரசாணை நகலினை தங்கள் பள்ளி அலுவலக தகவல் பலகையில் இது சார்ந்து தெரிவிக்குமாறும் தங்கள் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டும் தகவல் தெரிவிக்கப்பட்டமைக்கு ஒப்புதல் பெற்று தங்கள் அலுவலக கோப்பில் பராமரித்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு.**

பார்வை 3ல் கண்ட அரசாணை நகல்

//ஓம் .செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்